மதுரை மாவட்டம் 06-11-2024

நேரம் : 1.30 மணி

மொத்த மதிப்பெண்கள் :45

வகுப்பு :12

கணக்குப்பதிவியல்

இரண்டாம் இடைப்பருவத்தேர்வு

தேர்வு எண்:

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (10 x 1=10)

1. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.

அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல் இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

2. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

(அ) பத்திர முனைமக் கணக்கு (ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு

(இ) பங்குமுதல் கணக்கு (ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

3. ஒறுப்பிழப்புச் செய்தபங்குகளை மறுவெளியீடு செய்தபிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது

(அ) பொதுக்காப்பு கணக்கிற்கு (ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு

(இ) பத்திர முனைமக் கணக்கிற்கு (ஈ) உபரி கணக்கிற்கு

4. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு

(அ) விற்பனையாளர் க/கு (ஆ) பற்பல சொத்துகள் க/கு (இ) பங்குமுதல் க/கு (ஈ) வங்கி க/கு

5. ₹7 செலுத்தப்பட்ட, ₹10 மதிப்புள்ளபங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில் அதன் குறைந்தஅளவு மறுவெளியீட்டு விலை

(அ) பங்கொன்று ₹10 (ஆ) பங்கொன்று ₹8 (இ) பங்கொன்று ₹ 3 (ஈ) பங்கொன்று ₹ 2

6. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல

(அ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலைஅறிக்கைகளின் பகுதி ஆகின்றன.

(ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.

(இ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.

(ஈ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள் பொது அளவு அடிப்படையின் சதவிகிதமதாக காட்டப்படுகின்றன.

7. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது ———— தகவல்கள்

(அ) பணம்சாரா (ஆ) கடந்தகால (இ) குறுகிய கால (ஈ) நீண்டகால

8. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹1,00,000 லிருந்து ₹ 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?

(அ) +20 % (ஆ) +50 % (இ) -120 % (ஈ) -20 %

9. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

(அ) நடப்புப் பொறுப்புகள் (ஆ) நடைமுறைமுதல் (இ) நிலைச்சொத்துகள் (ஈ) நீண்டகாலச்சொத்துகள்

10. பல ஆண்டுகளுக்கான தொகைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு எடுத்துக்கொண்டால், அப்பகுப்பாய்வு_______________ என்றழைக்கப்படும்.

(அ) செங்குத்துப் பகுப்பாய்வு (ஆ) கிடைமட்ட பகுப்பாய்வு

(இ) போக்குப் பகுப்பாய்வு (ஈ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 16 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

11. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன? (4 x 2 = 8)

12. மிகை ஒப்பம் என்றால் என்ன?

13. நிதிநிலை அறிக்கைகள் யாவை?

14. குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2017 - 18 |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

15. சாரா நிறுமம் பங்கொன்று ₹ 10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்குகளை முகமதிப்பில் வெளியிடுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

16. பின்வரும் தகவல்களிலிருந்து அனு நிறுமத்தின் போக்கு சதவிகிதங்களைகணக்கிடவும்.

அனு வரையறு நிறுமத்தின் போக்குப்பகுப்பாய்வு

| விவரம் | ரூ (ஆயிரத்தில்) | | | போக்கு சதவீதங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ம் ஆண்டு | 2ம் ஆணடு | 3ம் ஆண்டு | 1ம் ஆண்டு | 2ம் ஆணடு | 3ம் ஆண்டு |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 | 100% | 110% | ? |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 200 | 250 | 240 | 100% | ? | 120% |
| நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 | 100% | ? | ? |
| மொத்தம் | 800 | 880 | 960 | 100% | 110% | 120% |

## பகுதி - III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். (4 x 3 = 12)

(வினா எண் 22 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

17. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்குமுள்ள வேறுபாடுகளை கூறவும்

18. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையுவு

19. விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்

20. கௌதம் வரையறு நிறுமம் இராகவ் அவர்களின் ₹10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ₹2 செலுத்தாதகாரணத்தினால் ஒறுப்பிழப்புசெய்தது ஒறுப்பிழப்புசெய்யப்பட்டபங்குகள் மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ₹8 வீதம் மறுவெளியீடுசெய்யப்பட்டது ஒறுப்பிழப்புமற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டு பதிவுகளைத்தரவும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

21. முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2017, மார்ச் 31 | 2018, மார்ச் 31 |
|---|---|---|
| I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| II சொத்துகள் | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |

22. ஜெயம் டயர்ஸ் நிறுமம் 15000 சாதாரணப் பங்குகளை ₹10 வீதம் பின்வருமாறு செலுத்தும்படி வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹3 ஒதுக்கீட்டின் மீது ₹5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹2. அனைத்து தொகையும் பெறப்பட்டது. ஆனால் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒரு பங்குதாரர் அழைப்பு பணத்தை செலுத்தத் தவறினார். அழைப்பு நிலுவைக் கணக்கைப்பயன்படுத்தி அழைப்பிற்கான குறிப்பேட்டுப்பதிவுகளைத் தரவும்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (3 x 5 = 15)

23. (அ) ஜாய் நிறுமம் ₹10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹5, ஒதுக்கீட்டின் போது ₹3, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. 9,000 பங்குகளை வாங்க பொதுமக்கள் விண்ணப்பித்தனர். இயக்குனர்கள் 9,000 பங்குகளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அல்லது)

(ஆ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ₹2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது. ₹2 விண்ணப்பத்தின் மீதும் ₹5 (முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும் ₹5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும் மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

24. (அ) பின்வரும் தகவல்களிலிருந்து, கவிதா நிறுமத்தின் போக்கு சாவீதங்களை கணக்கிடவும்.

| விவரம் | (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2015 – 16 | 2016 – 17 | 2017 – 18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

(அல்லது)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(ஆ) சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின் 2109, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| விவரம் | சர்மிளா நிறுமம் | சங்கீதா நிறுமம் |
|---|---|---|
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,00,000 | 11,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 4,00,000 | 7,00,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |
| II. சொத்துகள் | | |
| நிலைச் சொத்துகள் | 6,50,000 | 18,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 3,50,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |

25. (அ) பாரடைஸ் வரையறு நிறுமம், ₹4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத்தரவும்.

அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

(அல்லது)

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 3,00,000 | 3,60,000 |
| இதர வருமானம் | 1,00,000 | 60,000 |
| செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி | 30% | 30% |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com